1 செப்டம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 22 ஆம் ஞாயிறு
(படைப்புகளின் அக்கறைக்காக உலக இறைவேண்டல் நாள்)

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் மண்ணுலகின் அழுகுரலைக் கேட்டல்

# எங்கே நம் இதயம்?

இயேசுவின் சீடர்கள் கழுவாத கைகளால் உண்பதைப் பார்த்த மக்கள் பலரும் தங்களின் அதிருப்தியை இயேசுவிடம் முறையிட்டார்கள். அவர்கள் எதைப் பற்றி குறைகூறுகிறார்கள் என்பதை அறிந்த இயேசு **வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்துவதை விட மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும்** என்று அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.



நமக்குள்ளிருந்து வெளியே வரும் பாவங்களான, பேராசை, துன்மார்க்கம், வஞ்சகம், சிற்றின்பம், பொறாமை, அவதூறு, பெருமை, மற்றும் அறிவீனம் ஆகியவற்றை இயேசு வெளிப்படுத்துகிறார். இவை நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்தவை. ஏனெனில் நம் உள்ளத்தின் நிறைவையே வாய் பேசுகிறது. ஒவ்வொரு தீயது மற்றும் நல்லவை நமக்குள் இருக்கிறது. நாம் நன்மையும் தீமையும் செய்யக்கூடியவர்கள். நம்மிடம் இருக்கும் ஊழல், மற்றும் அசுத்தமான நோக்கங்களை எவ்வளவுக்கெவ்வளவு கட்டுப்படுத்துகிறோமோ அவ்வளவு சிறந்தது.

பல நேரங்களில் நாம் சரியானதைத் தான் செய்கிறோம், நம் இதயம் சரியான இடத்தில் தான் இருக்கிறது என்று நினைக்கலாம். நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் உலகத்தையும் நாம் எப்போதும் மகிழ்வித்துக்கொண்டே இருக்கிறோம். நம்மைச் சுற்றியிருப்பவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால், நாம் சரியான பாதையில் தான் செல்கிறோம் என்று நாம் எண்ணக்கூடும். இவ்வாறு நம் எண்ணத்தை ஒருநிலைப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் எளிது. இது தான் உலகின்வழி, பெரும்பாலும் நாமும் அடிக்கடி இந்த உலகத்தின் உணர்வுகளைத் தான் பின்பற்றுகிறோம். இந்த நடவடிக்கை ஒரு பழக்கமாகவே மாறிவிடுகிறது. மேலும் பழக்கவழக்கங்கள் நம் குணத்தையும் இதயத்தையும் வடிவமைக்கின்றன.

சிலசமயங்களில் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நின்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் இதயம் உண்மையில் என்னதான் சொல்கிறது? இயேசு எச்சரிக்கும் இந்தப் பாவச்சிந்தனைகள் சில நம்மிடம் இருக்கிறதா? நாம் எப்போதும் சரியானவர்கள் என்று நினைக்கும் அளவுக்கு நம் வாழ்வில் வசதியாக இருக்கிறோமா?

மற்றவர்களின் தேவைகளைப் பார்ப்பதே உண்மையான சமயம் என்றும், அவர்களின் தேவைகளை குறிப்பாக, விதவைகள், ஆதரவற்றோரை நோக்கி புனித யாக்கோபு சுட்டிக்காட்டுகிறார். இன்று நமது சொந்த சமூகங்களிலும் அதே அளவு அவசரத் தேவைகள் உள்ளன. அகதிகளின் குடும்பங்கள், கைதிகள், மற்றும் அவர்களது குடும்பங்கள் அவமானத்தில் மூழ்கியுள்ள நிலையில், நகர்ப்புறத்தில் B40 நிலையில் இருக்கும் ஏழைகள், நம்முடைய உதவி தேவைப்படுவோர் ஆகியோரின் தேவைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதே உண்மையான சமயம் என்று சுட்டிக்காட்டுகிறார்.

நம்மிடையே இருக்கும், "கடைசியானோர், விளிம்புநிலையில் இருப்போர், சிறியோர் மற்றும் தொலைந்துபோனவர்கள்", ஆகியோரைப் பற்றிக் கவலைப்பட நம்மை புனித யாக்கோபு அழைக்கிறார். ஆனால் இதைச் செய்வது அவ்வலவு எளிதல்ல. இவர்களைச் சென்று சந்திக்க எத்தனைமுறை முயற்சி எடுத்துள்ளோம். நம் இதயம் எங்கே? யாருடைய குரலைக் கேட்கிறோம்? மிக முக்கியமாக நாம் என்ன செய்திகளைப் பகிர்ந்துகொள்கிறோம்? நம் உள்ளத்தின் ஆழத்தில் இருந்தும் நமக்குள் இருந்தும் வெளியே வருவது என்ன?

இது ஒரு வெளிப்படையான மற்றும் நேர்மையான இதயத்தைச் சோதித்துப் பார்க்கும் நேரம்.

> நம் பூமி நம்மிடம் பேசிக்கொண்டிருக்கிறது, நாம் வாழவேண்டும் என்று விரும்பினால், அது கூறும் செய்தியை கட்டாயம் நாம் கேட்கவேண்டும்.
>
> *Pope Benedict XVI*







**இன்றைய இறைவார்த்தை:**

இணைச்சட்டம் 4: 1-2, 6-8

திபா: 15: 2-5

யாக்கோபு : 1: 17-18, 21-22, 27

மாற்கு 7: 1-8, 14-15, 21-23

INTERNAL CIRCULATION ONLY
BUL 35/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org